ISSN : 2349 - 1914

# நடை இதழ்

## பன்னாட்டு ஆய்விதழ்

## International Journal



நவம்பர் 2025 மலர் – 12 இதழ்–11

# பொருளடக்கம்

பக்கம்


1. தமிழ் இலக்கண நூல்கள் கூறும் சார்பெழுத்துகளின் வகைமைகள்
   – பா. சங்கீதா & முனைவர் யு. துர்காதேவி ... 5

2. கடவுள் கோட்பாடும் சித்தரும்
   – வெ. இராம்ராஜ் ... 10

3. வாணகோப்பாடிநாட்டு ஜம்பைகாசி விசுவநாதர் கோயில் ஓர் வரலாற்றாய்வு
   – வே. ராமச்சந்திரன் ... 16

4. அறம் – நீதி சொற்பொருள் விளக்கம்
   – அ. ஷமிம் நிஷா ... 22

5. கரிகால் பெருவளத்தானின் சிறப்பும்பெருமையும்
   – பெ. தேவி ... 25

6. சித்தர்களின் இறையியல் முரண்பாட்டுச் சிந்தனைகள்
   – அ.ஜோ. தியோடர் ராஜ்குமார் ... 30

7. தலைவர் இரட்டை மலை சீனிவாசன்
   – கா. லதா ... 35

8. காரை. இறையடியானின் தனித்தமிழ் இலக்கிய இதழ் 'பூஞ்சோலை'
   – மு. முஜீபுர்ரகுமான் ... 40

9. பெண்களின் நிலையும் மறுமலர்ச்சியும்
   – மு. சின்னப்பன் ... 44

10. மதுவினால் பெண்கள் வாழ்வில் நிகழும் இன்னல்கள்
   – இரா. சித்ராலயா ... 52

11. சீவக சிந்தாமணியில் வெட்சித்திணை மரபு
   – கு. இளங்கோவன் ... 58

12. பத்திரகிரியார் பாடல்களில் இறைச்சிந்தனைகள்
   – கு. இரமேஷ் ... 63

13. சிரேனிகன் போற்றும் சிரீவர்த்தமானன்
   – ஜி. சன்மதி ... 67

ISSN : 2349 - 1914

# தமிழ் இலக்கண நூல்கள் கூறும் சார்பெழுத்துகளின் வகைமைகள்

**பா. சங்கீதா**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
**முனைவர் யு. துர்காதேவி**
உதவிப்பேராசிரியர் மற்றும்
நெறியாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை - 600117.

## முன்னுரை

மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்கும் செம்மொழியாம் தமிழ்மொழியின் தொன்மையினை அவற்றிலுள்ள இலக்கண, இலக்கிய வளங்களை வைத்தே அறியலாம். பிற மொழிகளெல்லாம் மொழிக்கு மட்டுமே இலக்கணம் கொண்டிருக்கையில், மனிதனின் வாழ்வியலுக்கும் இலக்கணம் கண்ட ஒரே மொழி தமிழ்மொழி. மொழியினையும் வாழ்வியலையும் ஒரே நேர்க்கோட்டில் வைத்துப் பார்த்தவர் தொல்காப்பியர். சார்ந்து வாழ்தல் எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. ஒன்றைச் சாராமல் தனித்து உயிர் வாழ்தல் இப்புவியில் அரிது. இப்பண்பு மொழிகளுக்கும் பொருந்தி வருதலால்தான் மொழிக்கும் வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் 'சார்ந்து வரல்' என்னும் சார்ந்து வரும் எழுத்துகளாகிய சார்பெழுத்துகள் பற்றியும் விளக்கியுள்ளார். அவரைப் பின்தொடர்ந்து மற்ற இலக்கண நூல் ஆசிரியர்களும் சார்பெழுத்துகள் பற்றிய தங்களது கருத்துகளை வரையறுக்கின்றனர். இக்கட்டுரையானது காலந்தோறும் மாற்றம் பெற்று வரும் தமிழ் இலக்கணங்களில் சார்பெழுத்துகளின் வகைமைகளை ஆராய்வதாக அமைகிறது.

## முதலெழுத்துகள் - விளக்கம்

"எழுத்து எனப்படுபஅகரம் முதல்
னகர இறுவாய் முப்பஃது என்ப"
(தொல்.1)

"தமிழ்மொழியில் வழங்கும் பல்லாயிரக்கணக்கான சொற்களைக் கொண்டு கூட்டியலசிப் பார்ப்பின், அவையெல்லாம் முப்பது ஒலியனில் அடங்கி நிற்கும் என்பது தமிழ் நூலோர் கண்ட அறிவியல் முடிபு. இவ்வரம்பு தொல்காப்பியர்க்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே ஏற்பட்டு வழிவழி வந்தது என்ற பேருண்மையை 'முப்பஃது என்ப' என்ற தொடரால் அறியலாம் என்று உரைக்கிறார் வ.சுப.மாணிக்கம்"[2]

மொழிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் உயிர் எழுத்துகள் மற்றும் மெய் எழுத்துகள் ஆகிய முப்பது எழுத்துகள் முதலெழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் அடிப்படையாய் அமைந்த இவ்வெழுத்துகளை முதலெழுத்துகள் என்பர். முதலெழுத்துகள் தனித்து இயங்கும் ஆற்றல் கொண்டவை.

## சார்பெழுத்துகள் - விளக்கம்

தொல்காப்பியர் சார்பெழுத்து என்ற சொல்லாடலைப் பயன்படுத்தாமல் 'சார்ந்து வரல், எழுத்து, எழுத்தோரன்ன' போன்ற சொற்களையே பயன்படுத்தியுள்ளார்.

"சார்ந்து வரல் மரபின்
மூன்று அலங்கடையே. ?
அவைதாம்,
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற்புள்ளியும் எழுத்து ஓரன்ன".
(தொல்.எழுத்து.3)

ISSN : 2349 - 1914

முதலெழுத்துகளைச் சார்ந்து வரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் என்பர். சார்பெழுத்துகள் தனித்து இயங்காது. சார்பெழுத்துகள் முதலெழுத்துகளின் துணைகொண்டே இயங்கும் என்பதனை நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் ,

"தம்மோடு தாம் சார்ந்தும் இடமும் பற்றுக்கோடும் சார்ந்தும் விகாரத்தால் t U j ; · r h ; b g G , j h = d .[4] என மொழிகிறார்.

சார்பெழுத்துகளின் பிறப்பு

ஆய்தம் ஆகிய சார்பெழுத்து, தலையை இடமாகக் கொண்டு பிறக்கிறது. அதன் முயற்சி பிறப்பு வாயைத் திறந்து ஒலித்தல் ஆகும். பிற சார்பு எழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றுவதற்குரிய இடத்தையும், அவை பிறத்தற்குரிய முயற்சியையும் தமக்கு உரியனவாக கொண்டு ஒலிக்கின்றன.

"ஆயுத க்கு இடம் தலை அங்கா முயற்சி சார்பெழுத்து எனவும் தம்முதல் அனைய"

- நன்னூல்

தமிழ் இலக்கண நூல்கள் கூறும் சார்பெழுத்துகளின் வகைமைகள்

கீழ்க்காணும் அட்டவணையில் தமிழ் இலக்கண நூல்கள் வரையறுத்துக் கூறிய சார்பெழுத்துகளின் எண்ணிக்கையும் அதனை விளக்கும் நூற்பாவும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

| நூல் பெயர் | நூற்பா | சார்பெழுத்துகளின் வகைகள் |
|---|---|---|
| தொல்காப்பியம் | சார்ந்து வரல் மரபின் மூன்று<br>அலங்கடையே.<br>அவைதாம்,<br>குற்றியலிகரம் குற்றியலுகரம்<br>ஆய்தம் என்ற<br>முப்பாற்புள்ளியும் எழுத்து ஓரன்ன.<br>( தொல்.எழுத்து.2 ) | குற்றியலிகரம்,<br>குற்றியலுகரம் மற்றும்<br>ஆய்தம் |
| வீரசோழியம் | நெடு நீர்மை யளபு;<br>பிணைந்தவர்க்கம்<br>மறுவறு வல்லொற்று மெல்லொற்று<br>மாம்; வன்மை மேலுகரம்<br>உறுவது நையுந் தொடர்மொழிப்<br>பின்னு நெடிற்பின்னுமே. (வீ.சோ.2)<br>....இகரங் குறுகி வருங்குற்<br>றுகரம்பின் யவ்வரினே. (வீ.சோ.3)<br>...ஒன் றரையாகும் ஐஔ (வீ.சோ.5)<br>...முன்வயிற் கால்வவ் வரின்<br>(வீ.சோ.19) | உயிரளபெடை,<br>குற்றியலிகரம்,<br>குற்றியலுகரம்,<br>ஐகாரக்குறுக்கம்,<br>ஔகாரக்குறுக்கம்,<br>மகரக்குறுக்கம் |
| நேமிநாதம் | ஓங்குயிர்கள் ஒற்றில்மேல் ஏறி<br>உயிர்மெய்யாய்<br>ஆங்கிரு நூற்றொருபத் தாறாகும் -<br>பாங்குடைய<br>வல்லொற்று மெல்லொற்று வர்க்கம்<br>அளபெடைகள்<br>சொல்லொற்றி நீட்டத் தொகும்.<br>(நே.3)<br>தொடர்நெடிற் கீழ்வன்மை<br>மேலுகரம் யப்பின்பு<br>அடைய வருமிகரம் அன்றி -<br>மடநல்லாய்<br>மும்மையிடத் தையெளவுங்<br>குன்றுமுன் னொற்றுண்டேற்<br>செம்மையுயிர் ஏறுஞ் செறிந்து<br>(நே.4)<br>குறில்நெடில்கள் ஒன்றிரண்டு<br>மூன்றளவு காலாங்<br>குறுகுமவ் வாய்தம் உயிர்மெய் -<br>பெறுமுயிரே<br>மெய்யாய்தம் இஉக் குறுக்கமரை<br>மென்மொழியாய்<br>ஐஔ வளவொன் றரை. (நே.5) | உயிர்மெய்,<br>உயிரளபெடை,<br>ஒற்றளபெடை,<br>குற்றியலிகரம்,<br>குற்றியலுகரம்,<br>ஐகாரக்குறுக்கம்,<br>ஔகாரக்குறுக்கம்,<br>மகரக்குறுக்கம்,<br>ஆய்தக்குறுக்கம். |
| நன்னூல் | உயிர்மெய் யாய்த முயிரள<br>பொற்றள<br>பஃகிய இஉ ஐஔ மஃகான்<br>தனிநிலை பத்துஞ் சார்பெழுத்<br>தாகும். | உயிர்மெய், ஆய்தம்,<br>உயிரளபெடை,<br>ஒற்றளபெடை,<br>குற்றியலிகரம்,<br>குற்றியலுகரம்,<br>ஐகாரக்குறுக்கம், |

ISSN : 2349 - 1914

| | | |
|---|---|---|
| | [illegible] | ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் |
| இலக்கண விளக்கம் | குற்றியல் இகரம் குற்றியல் உகரம் ஆய்தமொடு உயிர்மெய் சாரளபு ஐஔ மகரம் குறுக்கம் உயிருடைய ஒற்றளபும் சார்பின் பாலன வென்மனார் - இ.வி.5 | உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் |
| தொன்னூல் விளக்கம் | சார்பெழுத் துயிர்மெய் தனியாய் தமக்கே படியே இ உ ஐ ஔ மவ்வாய்க் குயிரளபொற்றள பொருபத்தென்ப தொ.வி.5 | உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் |
| முத்துவீரியம் | சார்புயிர் மெய்தனி நிலையிரு பாலன. (மு.வீ.6) | உயிர்மெய், ஆய்தம் |
| சுவாமிநாதம் | ஆய்தம் இகர உகரக் குறளின் இடையன ஐஔ ஆய்தம் மவ்வோடொன்றாய் உயிர்மெய் நாற்றொண்ணிட்டு உயிரளபு எழ் ஒற்றின் உருமை பதினொன்றொடு இருநூற்று நாற்பானொன்று சார்பெழுத்து இருநூற்று எழுபத்தொன்றெண்ணாகும் பகுதியிடம் முயற்சி பொருள் அளவு உரு ஏற்பனவே பொருந்தும் இவைசிறப்பாலவையாது முறையுறுமே. (சுவாமி நாதம் 3) | ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம், மகரக் குறுக்கம், உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை |
| தமிழ்நூல் | உயிர், மெய், ஆய்தம் உயிர்மெய் நான்கே உயிர்நேர் தமிழின் எழுத்து வகைமை (தமிழ் நூல் நூ.3) உயிரும் மெய்யுமே அடிப்படை எழுத்துகள் (தமிழ் நூல் நூ.4) | குறிப்பிடப்படவில்லை |
| தமிழ்காப்புஇயம் | குற்றிய லிகரம் குற்றிய லுகரம் ஆய்தம் என்ற மூன்றே சார்ந்துவரூஉம் மரபின் எழுத்தென மொழிப (தமிழ்காப்புஇயம் நூற்பா) | குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் |

**சார்பெழுத்துகளின் வகைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்**

1) தொல்காப்பியம் சார்பெழுத்துகள் மூன்று எனவும் வீரசோழியம் சார்பெழுத்துகள் ஆறு எனவும் வரையறை செய்கின்றன.
2) 12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நேமிநாதம் என்ற இலக்கண நூலின் ஆசிரியர் சார்பெழுத்துகள் ஒன்பது என வரையறுத்துக் கூறுகிறார்.
3) 13 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நன்னூல் சார்பெழுத்துகள் பத்து எனக் கூறுகிறது.
4) 19 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தொன்னூல் விளக்கம் மற்றும் சுவாமிநாதம் சார்பெழுத்துகள் பத்து என நன்னூலின் கூற்றினையே மொழிகின்றன.
5) இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ்காப்புஇயம் என்ற இலக்கண நூல் சார்பெழுத்துகள் மூன்று எனத் தொல்காப்பியர் கூற்றினையே வழிமொழிகிறது.
6) தொல்காப்பியம் மற்றும் வீரசோழியம் ஆகிய இவ்விரு இலக்கண நூல்களும் உயிர்மெய் எழுத்துகளைச்

ISSN : 2349 - 1914

சார்பெழுத்துகளாக வரையறுத்துக் கூறவில்லை.

7) முத்து வீரியம் என்னும் இலக்கண நூல் மட்டுமே குற்றியலிகரம் மற்றும் குற்றியலுகரத்தைச் சார்பெழுத்துகளாக ஏற்கவில்லை.

8) வீரசோழியம் மற்றும் நேமிநாதம் ஆகிய இவ்விரு இலக்கண நூல்களும் ஆய்த எழுத்தினைச் சார்பெழுத்துகளாக வரையறுத்துக் கூறவில்லை.

9) தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம் மற்றும் முத்து வீரியம் ஆகிய இலக்கண நூல்கள் ஆய்தக் குறுக்கங்களைச் சார்பெழுத்துகளாக ஏற்றுக் கொள்ளவில்லை.

10) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ்நூல் சார்பெழுத்துகள் எனத் தனியே ஏதும் இல்லை எனவும், உயிர், மெய் எழுத்துகள் மட்டுமே அடிப்படை எழுத்துகள் எனவும் வரையறுக்கிறது.

11) பெரும்பான்மையான இலக்கண நூலாசிரியர்கள் உயிர் மெய் எழுத்துகளையும், குற்றியலிகரம் மற்றும் குற்றியலுகரத்தையும், நால்வகைக் குறுக்கங்களையும் சார்பெழுத்துகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

12) நிறைவாக நேமிநாதம் மற்றும் நன்னூல் வரையறுத்த சார்பெழுத்துகளின் வகைகளே நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருதல் உற்றுநோக்கத்தக்கது.

**தொகுப்புரை**

சார்பெழுத்து வகைகளின் மாற்றங்கள் தொல்காப்பியத்தில் பிறந்து, வீரசோழியத்தில் தவழ்ந்து, நேமிநாதத்தில் நடைபயின்று, நன்னூலில் வளர்ந்து, இலக்கண விளக்கம் மற்றும் தொன்னூல் விளக்கத்தில் வாழ்ந்து , முத்து வீரியம், சுவாமிநாதம், தமிழ்நூல், தமிழ்காப்பு இயத்தில் நிலைத்திருக்கிறது. இனிவரும் காலங்களில் சார்பெழுத்துகளின் எண்ணிக்கையில் மாற்றமும் ஏற்றமும் வருவது இயல்பு.

காலந்தோறும் சார்பெழுத்து வகைமைகளில் சில மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருந்திருக்கின்றன. அவ்வகையில் சில விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டும் சில விதிகள் மறுக்கப்பட்டும் வருவது மறுக்கவியலாத உண்மை. நேமிநாதம் மற்றும் நன்னூல் வரையறுத்துக் கூறிய சார்பெழுத்துகளின் வகைகள் தமிழ் அறிஞர்களாலும் தமிழ்ச் சான்றோர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருவது "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே"[6] என்ற நன்னூலின் கூற்றும் "மாற்றம் ஒன்றே மாறாதது" என்ற கூற்றும் இலக்கண விதிகளுக்கும் பொருந்தும் என்பதை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1) தொல்காப்பியர், தொல்.எழுத்து, நூ.1.
2) வ.சுப.மாணிக்கம் , தொல். எழுத்து, நூன்மரபும் மொழிமரபும் (பக்க எண்-21)
3) தொல்காப்பியர், தொல்.எழுத்து, நூ.3.
4) மயிலை நாதர் நன்னூல் உரை, நூ.58.
5) பவணந்தி முனிவர், நன்னூல் நூ.8.
6) பவணந்தி முனிவர், நன்னூல் நூ.467.

**துணைநூற்பட்டியல்**


1) தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - புலியூர்த் தேசிகன் தெளிவுரை
2) நன்னூல் எழுத்ததிகாரம் - காண்டிகையுரை (பேராசிரியர் புலவர் சோம.இளவரசு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
3) வீரசோழியம் - திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1 வெளியீடு -1970

ISSN : 2349 - 1914


4) இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மூலமும் உரையும் - திருவாரூர் வைத்திய தேசிகர், கழக வெளியீடு

5) ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்- வீரமாமுனிவர், பதிப்பாசிரியர் ச.வே.சுப்பிரமணியன், சென்னை-1978

6) நேமிநாதம் - குணவீரபண்டிதர், பதிப்பு மதுரைத் தமிழ்ச் சங்க முத்திராசாலை-1923

7) முத்து வீரியம் - முத்து வீர உபாத்தியாயர், பதிப்பாசிரியர் பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி

8) இலக்கண வரலாறு - சோம.இளவரசு, மெய்யப்பன் பதிப்பகம்,2023.

9) இலக்கண வரலாறு - இளங்குமரன்,இரா, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை,2020.

10) தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபும் மொழிமரபும் மாணிக்கவுரை - வ.சுப.மாணிக்கம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1989.